செ. கு. எண்: 005 நாள்: 12.01.2019

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்களின் இரங்கல் செய்தி – 12.1.2019**

---

திருநெல்வேலி மாவட்டம், வாசுதேவநல்லூர் தொகுதி சட்ட மன்ற உறுப்பினர் திரு. அ. மனோகரன் அவர்களின் அன்பு தந்தை திரு. இ. அய்யாசாமி அவர்கள் உடல்நலக்குறைவால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பலனின்றி இன்று (12.1.2019) காலமானார் என்ற செய்தி அறிந்து மிகுந்த வருத்தம் அடைந்தேன்.

இந்த துயரச் செய்தி குறித்து அறிந்தவுடன், தந்தையை இழந்து வாடும், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. மனோகரன் அவர்களை தொலைபேசியில் தொடர்பு கொண்டு அவரின் அன்பு தந்தையின் மறைவுக்கு ஆறுதல் கூறினேன்.

திரு. அ. மனோகரன் அவர்களின் தந்தை திரு. அய்யாசாமி அவர்கள் நல்லதொரு தந்தையாகவும், நல்ல வழிகாட்டியாகவும் திகழ்ந்தார். அவரது மறைவு திரு. மனோகரன் அவர்களுக்கும் அவர்தம் குடும்பத்தினருக்கும் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பு ஆகும்.

தனது அன்புத் தந்தை திரு. அய்யாசாமி அவர்களை இழந்து வாடும் திரு.மனோகரன் அவர்களுக்கும், அவரது குடும்பத்தாருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்வதுடன், அவரது ஆன்மா இறைவன் திருவடி நிழலில் இளைப்பாற எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கிறேன்.

**K. பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**